## இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் - 2014

---

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

# 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் கணக்கீட்டு நியமங்களின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடு செய்து காண்பிக்க முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காசும் காசுக்குச் சமமானவைகளுக்கும் உரிய ரூபா 81,485,839 பெறுமதியான வங்கி மறை மீதி கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் மிகையில் சீராக்குவதற்குப் பதிலாக நிதிச்செயலாற்றல் கூற்றில் நிதிச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் மாற்றமடையாது கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகள் மற்றும் பெறவேண்டிய மீதிகள் ரூபா 4,090,670 தொகையினை அறவிடும் சாத்தியத் தன்மையினைக் கவனத்திற் கொண்டு அதற்காக ஏற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு

பணியகத்தின் நிதிக்கூற்றுகளில் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திற்குரிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 8,187,104 ஆக இருந்த போதிலும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணியகத்திற்குரிய கடன்பட்டோர் மீதி ரூபா 8,753,371 ஆனமையால் ரூபா 566,267 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 655,474,602 தொகை வியாபாரச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், செலவினங்களை உறுதிப்படுத்துவதற்குரிய கேள்வி ஆவணங்கள், விலைப்பட்டியல் பத்திரம் மற்றும்

உரிய தரப்பினருக்கு பணம் வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழியில் நின்ற பணமாக நிதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 38,565,610 தொகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐக்கிய அமெரிக்க மேம்படுத்தல் பணியகத்திலிருந்தும் வெளித்தரப்பினர்களிடமிருந்தும் கிடைக்க வேண்டிய ரூபா 3,304,920 நீண்டகாலமாக மாற்றமின்றிக் காணப்பட்ட போதிலும் அந்த மீதிகளுக்குரிய தரப்பினர்களிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மீதிகளில் ரூபா 2,448,920 கூட்டுத்தொகை 4 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் ரூபா 1,594,844 கூட்டுத்தொகை 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையான பழைய மீதிகளை உள்ளடக்கியிருந்தது. மேலும் செலுத்தவேண்டிய மீதிகளில் ரூபா 48,000 தொகை 04 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் ரூபா 7,836,960 தொகை 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையிலாள பழைய மீதிகளாகும்.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உபபிரிவு | ஒவ்வொரு கலண்டர் வருடத்தின் இறுதியிலும் மூன்று மாதங்களை விஞ்சுவதற்கு முன் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பணியகத்தின் வேலை தொடர்பான அறிக்கை, அரையாண்டு கணக்கறிக்கை, எதிர்வரும் 03 வருட கால எல்லையில் எதிர்பார்க்கப்பட்ட திட்டங்கள் மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் தொடர்பான செயலாற்றலை உள்ளடக்கிய கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 10 ஆம் பிரிவின் 5 ஆம் உப பிரிவு | ஏதாவது வருடமொன்றில் தேறிய மிகை வருமானத்தில் எஞ்சுகின்ற சகல பணமும் திரண்ட நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) 16 ஆம் பிரிவின் 2 மற்றும் 3 ஆம் உபபிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 81,485,839 தொகையான வங்கி மேலதிகப்பற்றுக்காக உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகிய இருவரினதும் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396 | செல்லுபடிக் காலத்தை விஞ்சிய ரூபா 139,573 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிச் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.14.1 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக சகல விடயங்கள் சம்பந்தமாக விதிக்கப்படுகின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் திறைசேரி செயலாளரின் இணக்கப்பாட்டுடன் பணிப்பாளர் சபையில் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பணியகம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

### 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 57 இன் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரமின்றி குறித்த தனியார் நிறுவனத்திற்கு ரூபா 5,000,000 அனுசரணைப்படியொன்று வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 17,936,798 மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 118,913,920 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 100,977,122 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 500 மில்லியன் தொகை நிதிச் செலவினமாகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிதி விளைவுகள் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழாவிற்காக ரூபா 120,694,486 கொடுப்பனவை வழங்குமாறு கோரி சேவை மற்றும் வசதிகளை வழங்கிய தனியார் நிறுவனமும் தரப்பினரும் பணியகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 08 வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நீதிமன்ற விசாரணையில் காணப்பட்டது.

### 3.3 செலவினங்களில் அசாதாரண அதிகரிப்பு

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் 09 செலவின விடயங்களில் ரூபா 683,787,300 தொகையான அசாதாரண அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.4 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்காக கணிக்கப்பட்ட தொழிற்படு மூலதன விகிதத்தின் படி உயர் திரவத்தன்மை பேணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக குறுங்கால முதலீடுகளில் பணத்தை ஈடுபடுத்தியிருந்தமை இதற்குக் காரணமாக இருந்தது.

| | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|
| | -------- | ---------- | --------- |
| நடைமுறை | 10.1:1 | 5.25:1 | 2.84:1 |
| விரைவு | 9.96:1 | 5.22:1 | 2.83:1 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் வியாபார நடவடிக்கைகளின் செலவினம் ரூபா 1,562 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அச் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 12.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எனினும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 19.8 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் இலங்கை பெற்ற வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஐக்கிய அமெரிக்க டொலர் 0.716 பில்லியன் அதாவது 41.7 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது. அதன் பிரகாரம் சுற்றுலாப் பயணிகளின் வருகை அல்லது இலங்கையின் சுற்றுலா வருமானம் தொடர்பில் வியாபாரச் செலவினம் நேரடியாகத் தாக்கமளித்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 03 ஆந் திகதி முதல் 2014 நவம்பர் 06 வரை ஐக்கிய இராச்சித்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சிக்காக கேள்வி நடைமுறைகளுக்குப் புறம்பாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 350,000 பெறுமதியான 02 இரத்தினக் கற்கள் மற்றும் இலவசமாக பணியகத்திற்குக் கிடைத்த 02 இரத்தினக்கற்கள் என்பன இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இலவசமாகக் கிடைத்த 02 இரத்தினக் கற்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் பணியகத்திற்குக் கிடைத்திருந்த 04 இரத்தினக் கற்களின் நிறை 1.4, 1.6, 1.63 மற்றும் 1.54 கரட் ஆக இருந்ததுடன் விலைப்பட்டியலின் பிரகாரம் ரூபா 350,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு இரத்தினக் கற்களின் நிறை 5.6 கரட் ஆனமையால் ஆபரணங்கள் அதிகாரசபையின் பரிசோதனை அறிக்கையுடன் இரத்தினக் கல்லின் நிறை இணங்காதிருந்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

(ஆ) ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சி (WTM(UK)2014) இற்காக வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கும் போது கூறுவிலை கோரல் கடிதம் திறக்கப்பட வேண்டிய திகதிக்கு 4 நாட்களுக்கு முன்னர் திறக்கப்பட்டமை, கேள்விதாரர் அல்லது முகவரொருவர் கேள்விக் கடிதத்தைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் சமுகமளிக்காமை, ஒப்பந்தக்காரர் பிரித்தானிய தூதுவர் அலுவலகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு அதன் பிரதியொன்று மேம்படுத்தல் பணியகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகளை வெற்றிகரமானதாக நிர்மாணிக்கப்பட்டமைக்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் சான்றிதழொன்று காணப்படாதிருக்கும் போது மேற்கூறப்பட்ட நிர்மாணங்களுக்காக ரூபா 17,803,508 கொடுப்பனவொன்று பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நடைபெற்ற சுற்றுலா மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Leisure Travel and Tourism Fair - 2014) ரீசேட்டுக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 7,800,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ரீசேட் இருப்புக்கள் பணியகத்திற்கு கிடைக்கப் பெற்றிராததுடன் கொள்வனவுகளுக்காக தயாரிக்கப்பட்ட பதிவேடு கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் உலக சுற்றுலா தினத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 5,824,000 தொகை செலவில் அச்சிடப்பட்ட ரீசேட் இருப்புக்கள் அரசியல்கட்சியொன்றின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமை பொருள் வழங்கும் நிறுவனத்தின் பணிப்பாளர்களிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் போதும் இது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2016 ஆகஸ்ட் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சுற்றுலா துறைகளில் சமூகப் பொறுப்புக்களை கண்டறிந்து மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 99,439,900 (வரி தவிர்த்து) தொகை பணியகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதவதற்காக பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பரீட்சிப்பதற்கு அமைச்சரினால் மூன்று நபர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் குழுவின் அறிக்கையொன்று உரிய அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததாகவும் அது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாதிருந்ததாகவும் பணியகத்தின் தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(ஊ) ‘‘ஹோம்ஸ்டே’’ விளம்பரமய நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைப்பதற்காக ரூபா 33.9 மில்லியன் தொகையான ஒப்பந்தம் அரச நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்படாமல் வரையறுக்கப்பட்ட கூறுவிலையின் கீழ் தனியார் நிறுவனமொன்றிற்கு எழுத்துமூல உடன்படிக்கையின்றி வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தாக்காரருக்கு ரூபா 14,500,000 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய பணிகளை நிறைவேற்றாமல் மீண்டும் 08 மாதகாலம் பணத்தைக் கையில் வைத்திருந்து 2015 ஆம் ஆண்டின் போது மீண்டும் பணியகத்திற்கு செலுத்தப்பட்டமையால் அரசாங்க பணம் முறையற்ற வகையில் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

12 சீன ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றிற்காக ரூபா 3,506,757 தொகை செலவில் இலங்கையின் சுற்றுலாத்துறையில் கவர்ச்சிகரமான சில பிரதேசங்களை மேவுகை செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்ட Familiarization Tours தொடர்பான அறிக்கை, சீன ஊடகவியலாளர்களின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த சுற்றுலாவிற்காக ஏற்பட்ட கிரயம் சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 88 ஆக இருந்த போதிலும். உள்ளபடியான பதவியணியினர் 45 ஆனமையால் வெற்றிடம் 43 ஆகக் காணப்பட்டது. பணியகத்தின் உயர் முகாமைத்துவத்தில் கவனத்திற் கொள்ளக்கூடிய வெற்றிட எண்ணிக்கை காணப்படுவதனால் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளை சிறப்பான மட்டத்தில் நடாத்திச் செல்வதற்கு இடையூறாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 வாகனப் பயன்பாடு

வாகனங்களை வாடகைக்குப் பெறும் போது கிலோமீற்றருக்கு ரூபா 40 செலுத்துவதற்கு உடன்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 95,692 கிலோமீற்றர் தூரம் ஓடியமைக்கு வாகன வாடகையாக ரூபா 4,784,181 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நாளொன்றிற்கு ஆகக் குறைந்த கிலோமீற்றர் எண்ணிக்கை ஓடாமையின் காரணமாக ஓடிய ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு ரூபா 50 செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 இன் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 10 மாத காலதாமதத்தின் பின்னர் அதாவது 2016 சனவரி 05 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவனத்தின் பலம், பலவீனம், அனுகூலமான சந்தர்ப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் இனங்காணப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இச்செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயன்முன்னேற்றங்களை காலரீதியில் பரீட்சிப்பதற்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணியகத்தால் 2014 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையையும் பரீட்சித்தபோது ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 137 செயற்திட்டங்களில் 94 இனை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு பணிகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரதி மற்றும் இடைக்கால கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவுச் சுற்றறிக்கையின் 04 ஆம் அத்தியாயத்தின் 4.2.1(அ) மற்றும் (இ) பிரிவின் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான விரிவானதொரு திட்டத்துடன் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களை உள்ளடக்கும் வகையில் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பணியகத்தால் அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவாக நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 35 விடயங்கள் தொடர்பில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுடன் ஒப்பிடும் போது 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) கொள்வனவுகள்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு
(எ) நிதி முகாமைத்துவம்